# ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளைக் கண்டறிதல்

தமிழில் மொத்தம் 247 எழுத்துக்களில் 42 எழுத்துக்களுக்கு தனியே பொருள் உண்டு. இந்த 42 எழுத்துகளுக்குரிய பொருளை கண்டுபிடித்தலே இப்பகுதியில் கேட்கப்படும் கேள்வியாகும். 42 எழுத்துக்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- பதம், மொழி, சொல் – ஒரு பொருளை உடையது.
- ஓர் எழுத்து மொழி நாற்பத்து இரண்டு (42)

**உயிர்மவி லாறுந் தபநவி லைந்தும்**
**கவசவி னாலும் யவ்வி லொன்றும்**
**ஆகு நெடி னொது வாங்குறி லிரண்டோர்**
**எழுத்தியல் பதமாறேழ் சிறப்பின**

**– நன்னூல் நூற்பா – 129**

**உயிர் வருக்கம் ஆறு :** ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ

| | |
|---|---|
| ஆ | பசு |
| ஈ | ஈ என்னும் பறவை |
| ஊ | உணவு |
| ஏ | அம்பு |
| ஐ | தலைவன் |
| ஓ | மகிழ்ச்சி |

**த வருக்கம் ஐந்து :** தா, தீ, தூ, தே, தை

| | |
|---|---|
| தா | அழிவு, தாண்டுதல் |
| தீ | நெருப்பு, இனிமை |
| தூ | தூய்மை, பகை |
| தே | கடவுள், அருள் |
| தை | ஒரு திங்கள் |

**ந வருக்கம் ஐந்து :** நா, நீ, நே, நை, நோ

| | |
|---|---|
| நா | நாக்கு, அயலார் |
| நீ | முன்னிலை நீ |
| நே | அன்பு, அருள் |
| நை | இகழ்ச்சிக் குறிப்பு |
| நோ | வறுமை |

**வ வருக்கத்தில் நான்கு :** வா, வீ, வை, வெள

| | |
|---|---|
| வா | வருதல் |
| வீ | மலர், விரும்புதல் |
| வை | வைத்தல், வைக்கோல் |
| வெள | கைப்பற்றுதல், ஒலிக்குறிப்பு |

**ய வருக்கத்தில் ஒன்று யா :**

| | |
|---|---|
| யா | யாவை, ஒருவகை மரம் |

**ம வருக்கம் ஆறு :** மா, மீ, மூ, மே, மை, மோ

| | |
|---|---|
| மா | அழகு, மேன்மை |
| மீ | உயர்ச்சி |
| மூ | மூப்பு, மூன்று |
| மே | அன்பு, மேம்பாடு |
| மை | அஞ்சனம், எழுதுமை |
| மோ | மோத்தல் |

**ப வருக்கம் ஐந்து :** பா, பூ, பே, பை, போ

| | |
|---|---|
| பா | பாட்டு, அழகு |
| பூ | மலர், புவி |
| பே | நுரை, மேகம் |
| பை | கொள்கலம், இளமை |
| போ | போதல் |

**க வருக்கத்தில் நான்கு :** கா, கூ, கை, கோ

| | |
|---|---|
| கா | காத்தல், சோலை |
| கூ | நிலம் |
| கை | கை, ஒழுக்கம் |
| கோ | மன்னன், பசு |

**ச வருக்கத்தில் நான்கு :** சா, சீ, சே, சோ

| | |
|---|---|
| சா | சாதல், சோர்தல் |
| சீ | இகழ்ச்சிக் குறிப்பு, இலக்குமி |
| சே | காளை மாடு, சிவப்பு |
| சோ | மதில், நகர் |

**குறில் : நொ, து**

| | |
|---|---|
| நொ | துன்பம், நோய் |
| து | உண், அசைத்தல் |

தமிழில் உள்ள 247 எழுத்துக்களில் நன்னூல் நூற்பாவின்படி 42 எழுத்துக்களுக்கு மட்டுமே தனித்த பொருள் உண்டு. முந்தைய தேர்வுகளில் அந்த 42 எழுத்துக்களில் இருந்து மட்டுமே கேள்விகள் கேட்கப்பட்டன. ஆனால் தற்பொழுது நடைபெறும் தேர்வுகளில் அந்த 42 எழுத்துக்களையும் தாண்டி கேள்விகள் கேட்கப்படுகின்றன. அவையாவன;

| | | | |
|---|---|---|---|
| அ | எட்டு, அழகு, சிவன் | சு | சுகம், மங்களம் |
| இ | 1 /2 –யின் தமிழ் வடிவம் | சை | அருவெறுப்பு ஒலி |
| உ | இரண்டு, ஆச்சரியம் | நே | நேயம், அருள் |
| எ | ஏழு, வினா எழுத்து | ப | நூறு |
| ஒள | உலகம், ஆனந்தம் | | |
| க | ஒன்று, கடவுள், அக்னி | | |
| கி | இரைச்சல், ஒலி | | |
| கௌ | தீங்கு, பற்று | | |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in
www.tnpscgroup4.in